# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1895/8 - 2014 දෙසැම්බර් මස 30 වැනි අඟහරුවාදා- 2014.12.30

*1895/8 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 30 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல. : வீஅஅ/காசு/சீஒஎல்/2013/06
காணி அமைச்சின் இல. : 4/3/6/2013/ஏச்டபிள்யூ/503

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :

மேல் மாகாணத்தில், கொழும்பு மாவட்டத்தில், கொலன்னாவ பிரதேச செயலாளர் பிரிவில், களனிமுல்லை கிராம அலுவலர் பிரிவில் உள்ள, களனிமுல்லை கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவை அதிபதி சார்பாக, கொழும்பு நில அளவை அத்தியட்சகரினால் தயாரிக்கப்பட்ட 04.11.2014 ஆம் திகதிய ஆரம்ப வரைபட இல. கொ.9312 இல் துண்டு இல. 1 - 3 வரை விபரிக்கப்பட்டுள்ள சுமார் 0.0635 ஹெக்டயார் மொத்த விஸ்தீரணமுடைய மூன்று (03) காணித் துண்டுகளின் மேலதிக விபரங்கள் பின்வருமாறு :-

**1. துண்டு இல. 24**
காணியின் பெயர் : லான்சிய கும்புர (பகுதி) ; விபரம் : சதுப்பு நிலம்; உரிமை கோருபவர் : அரசு ; ஆரம்ப உரிமை கோருபவர் : களுகல்லே தம்மரத்ன தேரர், ஸ்ரீ விஜயரத்னராமய, களனிமுல்லை ; விஸ்தீரணம்: 0.0156 ஹெக்டயார்.

**3. துண்டு இல. 26**
காணியின் பெயர் : கொடஒவிட்ட மற்றும் புவக்கஹவத்தை (பகுதி) ; விபரம் : சதுப்பு நிலம் ; உரிமை கோருபவர் : அரசு ; ஆரம்ப உரிமை கோருபவர் : எல்.ஆர்.டீ. சியா ஜானகி, எல்.ஆர்.டீ. விமலாவதி, எல்.ஆர்.டீ.வி. பத்மினி மற்றும் எல்.ஆர்.டீ.ஏ. ரத்னசிறி, இல.135, களனிமுல்லை, அங்கொடை ; விஸ்தீரணம்: 0.0203 ஹெக்டயார்.

**3. துண்டு இல. 27**
காணியின் பெயர் : தொம்பகஹவத்தை, தெம்பிலிகொட்டுவ மற்றும் கொடஒவிட்ட (பகுதி) ; விபரம் : சதுப்பு நிலம் ; உரிமை கோருபவர் : அரசு ; ஆரம்ப உரிமை கோருபவர் : டபிள்யூ.எச்.பெரேரா, எம்.சி.பெரேரா, டபிள்யூ.டீ.பெரேரா மற்றும் எம்.எச்.பெரேரா, இல.426, களனிமுல்லை, அங்கொடை ; விஸ்தீரணம்: 0.0276 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2015 சனவரி 12 ஆந் திகதி மு. ப. 9.30 மணிக்கு காணிப் பிரிவு, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, 3ஆவது மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்லை அலுவலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2014 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

எஸ். ஒபநாயக்க,
பணிப்பாளர் (காணிகள்) மற்றும் காணி சுவீரிகத்தல் அதிகாரி,
வீதி அபிவிருத்தி அதிகாரசபை.

காணிப் பிரிவு,
வீதி அபிவிருத்தி அதிகாரசபை,
3ஆவது மாடி, "செத்சிறிபாய",
பத்தரமுல்லை.
18 திசெம்பர் 2014.

01-423



இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல. : AKU/LAN/06/LA 3726
காணி அமைச்சின் இல. : 2012வேறு உபதேசம்

1994 யூன் 03 ஆந் திகதிய 821/26 இலக்க இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் அதிவிஷேட வர்த்தமானப் பத்திரிகையில் 1 A பக்கத்தில் 7 ஆம் பிரிவின் கீழ் என்னால் அறிவித்தல் கொடுக்கப்பட்ட 1994 யூன் 29 ஆந் திகதி முற்பகல் 10.00 மணிக்கு என்பதை 2015, மாச்சு 04 ஆந் திகதி பிற்பகல் 2.30 மற்றும் 1994 ஜுன் மாதம் 22 ஆந் திகதி என்பது 2015 பெப்ரவரி மாதம் 25 ஆந் திகதி என மீளத்திருத்தப்பட்டுள்ளது, என்பதை இத்தல் தெரிவிக்கப்படுகிறது. மேலதிக விபரம் 1994. 06.03 ஆந் திகதிய 821/26 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஓ.வி. சந்தன திலகரத்ன,
பிரதேச செயலாளர்,
அக்குறஸ்ஸ.

பிரதேச செயலகம்,
அக்குறஸ்ஸ
2014, திசம்பர் 12.

01-424